# நீங்கள் செய்வது எல்லாம் வாய்க்கும்

சகோ. பிரேமா டேவிட்



கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத்தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். சங் 1:2,3

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, நாம் செய்வதெல்லாம் வாய்க்க வேண்டும் என்று விரும்பி வார்த்தையை அனுப்பி, அதை நடந்தேறும்படிச் செய்கிற (ஏசாயா 55:1) நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நான் நினைக்கிறது எங்கே நடக்குது? நீ தொட்டது என்னைக்கு வாய்ச்சிருக்கு? இந்த வார்த்தைகள் இதுவரை உங்கள் வாயால் சொல்லியிருப்பீர்கள் அல்லது மற்றவர்கள் சொல்ல உங்கள் காதுகளில் கேட்டிருப்பீர்கள். ஆனால் இன்றைக்கு உங்களைப் பார்த்து கர்த்தர், சொல்லுகிறார் நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும் என்று. கடவுள் வந்தாலும் என் தலையெழுத்தை மாத்தவே முடியாது. எத்தனை தடவை Attempt, எத்தனை முறை Start பண்றது. எத்தனை வரன், எத்தனை Compa, என்னை விட்டுப் போய் ரொம்ப நாளாயிருச்சுனு சொல்லிக் கொண்டிருக்கிறீர்களா? எனக்கு ஏற்ற மதிப்பெண், வேலை கிடைக்கலைனு வேதனைப்படுகிறீர்களா? கவலைப்படாதிருங்கள். கர்த்தர் நிச்சயமாய் உங்கள் காரியங்களை, நீங்கள் செய்வதை வாய்க்கச் செய்வார்.

## அவர் ஆச்சரியமாய் செய்தது என்ன?

ஒருமுறை இயேசு மலைமேல் அமர்ந்து வசனங்களைப் போதித்துக் கொண்டிருந்தார். மூன்று நாளாகியும் பசியை மறந்து, வீட்டை மறந்து தங்களுடைய பொழுதுபோக்கெல்லாம் வெறுத்து, வேலையை மறந்து பசிதாகத்தோடு தன் பாதத்தில் அமர்ந்து வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்த தம்முடைய மக்களைச் சரீரப்பசியோடு அனுப்ப மனமில்லாமல், தன்னுடைய சீஷரை அழைத்து, ஜனங்களுக்காக பரிதபிக்கிறேன், ஏதாவது செய்யலாம் என்று நினைக்கிறேன். இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்து மூன்றுநாளாய் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களாகையால் நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்து போவார்கள் என்றார். அதற்கு சீஷர்கள் 200 பணத்துக்கு வாங்கிட்டு வந்து கொஞ்சம் கொஞ்சமாய் கொடுத்தாலும் கூட பத்தாதே என்று தங்களுடைய மனதிலே நினைக்கிறதை ஒளிவு மறைவு இல்லாமல் ஆண்டவரிடம் சொன்னார்கள். உடனே உங்களிடம் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். ஏழு அப்பங்களையும், சிலசிறு மீன்களையும் கொண்டு போய் கொடுத்தார்கள். எல்லோரையும் வரிசை வரிசையாய் பந்தியிருக்க கட்டளையிட்டு, ஏழு அப்பங்களை எடுத்து பிதாவைப் பார்த்து ஸ்தோத்திரம் பண்ணி, ஆசீர்வதித்து பிட்டு சீஷர்களிடத்தில் கொடுத்தார். அவர்கள் பரிமாறினார்கள். எல்லாரும் திருப்தியாய் சாப்பிட்டார்கள். எவ்வளவு பேர் தெரியுமா? நாலாயிரம் பேர் பெண்கள், பெரியவர், சிறியவர் என குறைந்தது 12 ஆயிரம் பேராவது சாப்பிட்டிருக்க வேண்டும். மீதியான உணவை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள் (மாற் 8:1-9) இதுபோல இன்னொரு முறை ஐந்து அப்பம், இரண்டு மீனை ஆசீர்வதித்தபொழுது 5000 ஆண்களும், பெண்கள், சிறியவர், பெரியவர் என்று ஏறக்குறைய 20,000 பேர் சாப்பிட்டார்கள். மீதியானதை 12 கூடை நிறைய எடுத்தார்கள். இந்த அற்புதத்தைக் கண்ட எல்லோரும் மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள். மட்டுமல்ல அவரே வானத்திலிருந்திறங்கின ஜீவஅப்பம், நல்லவர் என்பதை ருசிபார்த்தார்கள்.

## அவர் செய்தது வாய்த்தது எப்படி?

நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். 1 கொரி 10:31.

இயேசு 40 நாட்கள் உபவாசமாயிருந்த போது பசியுண்டாயிற்று அப்பொழுது சாத்தான் நீ தேவகுமாரனாக இருந்தால் இந்த கல்லுகளை அப்பங்களாக்கும் என்று சோதித்தான். தேவனாக இருந்த இயேசு, இந்த பூமியில் மனிதனாகப் பிறந்தவுடன், அவருடைய தெய்வத்தின் தன்மை, வல்லமை மாறவும் இல்லை, குறையவுமில்லை. அவர் பூமியில் வாழ்ந்த போது, 100/100 தேவனாகவும், மனிதனாகவும் வாழ்ந்தார். தான் சாப்பிடுவதற்காக, தனக்காக அவர் இங்கு வரவில்லை. மக்களின் பசியை ஆற்றி, அவர் களின் பாவ, சாபங்களை தான் சுமந்து தீர்ப்பதின் மூலம் அவர்கள் விடுவிக்கப்பட்டு, சந்தோஷப் படுவதின் மூலம் பிதா மகிமையடைய வேண்டும் என்பதற்குத் தான் வந்தார். மனுஷன் அப்பத் தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று சொல்லி சோதனைக்காரனை மேற்கொண்டார்.

இயேசு அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி பிட்டதைப்போல நீங்களும், உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பிற்காக, கடமைக்காக, படிப்பு, வேலை, உங்களுக்கிருக்கும் கொஞ்ச ஞானம், பெலனுக்காக, ஒத்தையாயிருக்கிறேன், ஒன்றுமேயில்லை என்பதை ஒளிவுமறை வில்லாமல் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள், உங்களிடத்தில் உள்ளவைகளுக்காக நன்றி சொல்லுங்கள். எந்த வேலையையும், படிப்பையும் ஆரம்பிக்கும் போது தேவனுக்கு நன்றி சொல்லி ஆரம்பியுங்கள். குறுக்கு வழியில் தவறான காரியங்களைச் செய்து, தற்புகழ்ச்சியில் விழுந்து, மனுஷரைப் பிரியப்படுத்த எதையும் செய்யா தீர்கள். குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக நீங்கள் எதைக் கேட்டாலும், எதைச் செய்தாலும் அது உங்களுக்கு வாய்க்கும். அவர் கையினால் உங்களுக்கு வாய்க்கும். ஏசாயா 53:10. உங்களுக்கு எதிரான ஆயுதங்கள் வாய்க்காதே போகும் ஏசாயா 54:17.

## என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்

அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள். யோவான் 2:5.

இயேசு இல்லாதவைகளை இருப்பது போல் அழைக்கும் தேவன். ஒன்றுமில்லாவிட்டாலும் உருவாக்குகிறவர். அவருக்குள் சகலமும் சிருஷ்டிக் கப்பட்டது. பரலோகத்திலும் பூமியிலுள்ள காண்கிற, காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும், அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது கொலே 1:16. அவர் ஒரு வார்த்தை சொன்னாலே வானத்திலிருந்து மன்னா பொழிந்தது போல அப்பங்களைக் கொடுக்க முடியும். ஆனால் உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். உடனே அப்பங்களை கொண்டு போய் கொடுத்தார்கள். சீடர்கள் இந்த ஏழு அப்பத்தை வைத்து எல்லோருக்கும் எப்படிக் கொடுக்க முடியும்? என்று யோசித்துக் கொண்டே எல்லோரையும் அவர் சொன்ன படியே பந்தியிருக்கச் செய்தனர். அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுத்தவுடன் பரிமாறினார்கள். நாலாயிரத் திற்கும் அதிகமான பேர் திருப்தியாய், வேண்டிய மட்டும் சாப்பிட்டனர். இயேசுவின் பலுகிப் பெருகச் செய்யும் வல்லமை அப்பங்களைக் கொடுத்துக் கொண்டே இருந்தது. திருப்தியான பின்பு 7 கூடை நிறைய மீதம் எடுத்தார்கள். ஒன்று கூட சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியானவைகளைச் சேர்த்து வையுங்கள் என்ற வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அப்படியே செய்தார்கள். திருப்தியான பின்பு, திரும்பிப் போய்விடாமல் ஆண்டவரோடே சீஷராய் நிலைத்திருந்தார்கள்.

இயேசுவினுடைய மனதுருக்கத்தைப் புரிந்து கொண்டு, அவர் சொல்லச் சொல்ல செய்தது போல நீங்களும், ஆண்டவருடைய வார்த்தையின்படி செய்யுங்கள். அவருடைய ஞானம், பெலத்தைப் பெற்றுக் கொண்டு, நீங்கள் செய்வதை தொடர்ந்து செய்யுங்கள். அதை அவர் வாய்க்கப் பண்ணுவார். அவருடைய வார்த்தை, வல்லமை நீங்கள் செய்வதை வாய்க்கப்பண்ணி, மிகுதியாய்ப் பெற்றுக் கொள்ளவும் மீதமெடுக்கவும் உதவி செய்வார். நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும் படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து, நீங்கள் செய்வதை வாய்க்கப்பண்ணுவாராக!.